**செய்தி வெளியீடு எண் : 2134** **நாள் : 26.11.2022**

# செய்தி வெளியீடு

இன்று இந்திய அரசியலமைப்பு தினம் கொண்டாட்டத்தை முன்னிட்டு அரசியலமைப்பின் கீழ் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்து மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாட்டின் தலைவர் நீதிஅரசர் மாண்புமிகு. திரு. எஸ்.பாஸ்கரன், அவர்களின் முயற்சியாள் தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்தின் அரங்கத்தில் இன்று (26.11.2022) கலந்தாய்வு நடைபெற்றது. இந்த கலந்தாய்வில் தமிழ்நாடு சட்ட சபை சபாநாயகர் திரு. எம்.அப்பாவு அவர்கள், தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி திரு. ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள்,மாநிலஅரசுதலைமைவழங்குறைஞர்திரு.ஆர்.சண்முகசுந்தரம் அவர்கள் மற்றும் செல்வி.ஏ.எஸ்.குமாரி, மாநில மகளிர் ஆணையம், தமிழ்நாடு, நீதியரசர் மாண்புமிகு. திரு. எஸ்.பாஸ்கரன், தலைவர், மாநில மனித உரிமைகள் ஆணையம், தமிழ்நாடு மற்றும் செல்வி.எஸ்தர் மரியசெல்வம், இணை இயக்குநர், (**Action Aid Association**) ஆகியோர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றார்கள். மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாட்டின் செயலாளர், டாக்டர். கே.விஜயகார்த்திகேயன் அவர்கள் இந்த கலந்தாய்வில் கலந்துகொண்டார். இந்த கலந்தாய்வுக்கு திரு.N.முரளிதரன், பதிவாளர், மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாடு அவர்கள் வரவேற்புரையும், சகோதரி. வளர்மதி, தலைமை செயல்பாட்டாளர், தமிழ்நாடு வீட்டு வேலை தொழிலாளர்கள் நல அறக்கட்டளை அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

பின்னர் வீட்டு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அரசியலமைப்பின் கீழ் உள்ள உரிமைகள் மற்றும் சமூக பாதுகாப்பு குறித்து குழு விவாதமும் நடைபெற்றது. இந்த குழு விவாதத்திற்கு காவல் துறை கண்பாணிப்பாளர் திருமதி. வி.ஜெயஸ்ரீ, (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றம்) நடுவராக இருந்து, இந்த குழு விவாதத்தில் திரு.கே.செல்வபெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர், ஸ்ரீபெரம்பதூர் தொகுதி திரு.எம்.சின்னதுரை, சட்டமன்ற உறுப்பினர், கந்தர்வகோட்டை தொகுதி, திருமதி.மரகதம் குமாரவேல், சட்டமன்ற உறுப்பினர், மதுராந்தகம் தொகுதி, மற்றும் டாக்டர்.நேஹா வாதவன், தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் (**Work in Freedom Programme, ILO – New Delhi** ) ஆகியோர் பங்கேற்றனர். இந்த குழு விவாதத்திற்கு  சகோதரி. கிளாரம்மாள், ஒருங்கிணைப்பாளர் தேசிய வீட்டு வேலை தொழிலாளர்கள் இயக்கம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

**பதிவாளர்**
**மாநில மனித உரிமைகள் ஆணையம்**
**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in